DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No.12/2022 |
| Police Station | Thiruppachethi P.S |
| Deposition of Witness for | LW.4/PW.4 |
| Name | சரண்யா |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**A1, A3 present. A2,4 produced .**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 11.01.2024 at 11.10a.m

**முதல் விசாரணை:**

நான் வேலாங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். சம்பவத்திற்கு 1 மாதத்திற்கு முன்பு எதிரிகளுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் பிரச்சனை இருந்து வந்தது. 10.12.2020ந் தேதி இரவு 8.30 மணியளவில் எங்கள் வீட்டில் நானும், மாமனார், மாமியார், எனது பிள்ளைகள், நாத்தனார், நாத்தனார் கணவர், கொழுந்தனார் குமார் ஆகியோர் இருந்தோம். அப்போது குமார் வீட்டுக்கு அடுத்து மயானக்கரை ரோட்டிற்கு போய் இயற்கை உபாதை கழிக்க சென்றார். அப்போது அவரின் அலறல் சத்தம் கேட்டது. வீட்டில் இருந்த அனைவரும் ஓடி போய்பார்த்தோம். அப்போது 5 நபர்கள் அருவாள், கத்தி போன்ற ஆயுதங்களை வைத்து குமாரை வெட்டி போட்டிருந்தார்கள். கருப்பசாமி அருவாளைக் கொண்டு குமாரை இடதுபக்க கையில் வெட்டினார். பூச்சி மாசாணம் என்பவர் அருவாளைக் கொண்டு குமாரை இடதுபக்க தலையில் வெட்டினார். பொன்னி மாசாணம் என்பவர் கத்தியைக் கொண்டு குமாரை இடது தோள்பட்டையில் வெட்டினார். வினோத் என்பவர் அருவாளைக் கொண்டு குமாரின் வலதுபக்க தோள்பட்டையில் வெட்டினார். நீ உயிருடன் இருந்ததால் தானே பிரச்சனை செய்வாய் என்று மிரட்டிவிட்டு எதிரிகள் மேற்குபுறமாக ஓடிவிட்டார்கள். 108க்கு போன் செய்து அதில் குமாரை அழைத்து சென்று சிவகங்கை அரசு மருத்துவமனையில் சேர்த்தோம்.

அங்கு உள்நோயாளியாக 3 நாட்கள் சிகிச்சை பெற்றார். அவர் சிகிச்சையில் இருக்கும் போது குமாரிடம் போலீசார் புகாரை பெற்று வழக்கு பதிவு செய்தார்கள். போலீசார் அதன்பின் விசாரணை செய்தார்.

**கு.வி (எதிரிகள் தரப்பில்)**

வழக்கின் அ.சா.1 எனது கொழுந்தன், அ.சா.2 எனது மாமனார், அ.சா.3 எனது மாமியார், அ.சா.5 எனது கணவரின் தங்கச்சி கணவர் என்றால் சரிதான். நீங்கள் அனைவரும் ஒன்றாக குடியிருந்து வருகிறீர்களா என்றால் மாமனார் வீட்டில் தனிதனியாக குடியிருந்து வருகிறோம். எங்கள் அனைவருக்கும் தனிதனியாக வீடு உள்ளதா என்றால் எனக்கும் எனது மாமனாருக்கும் தனிதனியாக வீடு உள்ளது. நான் என்னுடைய வீட்டில் தான் குடியிருக்கிறேன். சம்பவ சமயத்தில் அ.சா.1 உடன் நான் செல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை பார்த்ததில் அ.சா.1 தனது முதன்மை விசாரணையில் நான் சம்பவத்தை பார்த்தேன் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அ.சா.1 தனது முதன்மை விசாரணையில் அ.சா.2, அ.சா.3 அலறல் சத்தம் கேட்டு வந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல, அ.சா.2, அ.சா.3 உடன் நானும் சென்று பார்த்தேன். நான் சத்தம் கேட்டு சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்திருந்தால் எவ்வளவு நேரம் நடந்திருக்கும் என்றால் 20 நிமிடம் நடந்திருக்கும். எனது நீதிமன்ற விசாரணையிலும் 161 மறுவாக்கு மூலத்திலும் சம்பவ இடம் இருட்டு என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ நேரம், தேதி 10.12.2020 இரவு 8.30 மணி என்றால் சரிதான். டிசம்பர் இரவு 8.30மணி இருட்டாக இருக்கும் என்றால் சரிதான், ஆனால் அந்த இடத்தில் லைட் எரிந்து கொண்டிருந்தது. சம்பவ இடத்தில் லைட் எரிந்தது பற்றி நீதிமன்ற விசாரணையிலும் 161 மறுவாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் வீட்டிலிருந்து எவ்வளவு தூரம் என்றால் எங்களது வீட்டிலிருந்து சம்பவ இடம் 50 முதல் 60அடி தூரம் இருக்கும். எங்கள் வீட்டிலிருந்து மாரநாட்டு கால்வாய் எவ்வளவு தூரம் என்றால் தெரியாது. எங்கள் வீட்டிலிருந்து மாரநாட்டு கால்வாய் 500அடி தூரம் இருக்கும் என்றால் 500அடி இருக்காது அதற்கு கம்மியாக தான் இருக்கும். அ.சா.1 தனது முதன்மை விசாரணையில் சம்பவ இடம் மாரநாட்டு கால்வாய், சுடுகாடு என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். எனது நீதிமன்ற

முதல் விசாரணையில் சம்பவ இடம் எனது வீட்டின் அருகே என்று சொல்லியுள்ளீர்கள் ஆனால் அ.சா.1 சம்பவ இடம் மாரநாடு கால்வாய் என்று சொல்லியுள்ளார் என்றால் சம்பவ இடம் எனது வீட்டின் அருகேயிருந்து 150 அடி இருக்கும், அதிலிருந்து 50அடி மாரநாட்டு கால்வாய், சுடுகாடு இருக்கும். என்னை போலீசார் அழைத்து விசாரித்தார். சம்பவம் நடந்த அன்று 10.12.2020 இரவு ஆனால் எனக்கு சரியாக நேரம் தெரியவில்லை. போலீசார் தாக்கல் செய்த வரைபடம் மற்றும் 161 வாக்குமூலத்தில் சம்பவ இடம் எங்களது வீட்டிற்கு எதிரே என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். என்னுடைய முதன்மை விசாரணையில் அ.சா.1 சிவகங்கை அரசு மருத்துவமனையில் 3 நாட்கள் சிகிச்சை பெற்றதாக சொல்லியுள்ளீர்கள் என்றால் முதன்மை விசாரணையில் நான் தவறாக சொல்லியிருந்தேன், சம்பவம் அன்று சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம், பின்னர் மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம், பின்னர் மேல்சிகிச்சைக்காக அ.சா.1 யை சரவணா மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். நீதிமன்றத்தில் அ.சா.1 அரசு மருத்துவமனை சிவகங்கை, அரசு ராஜாஜி மருத்துவமனை மதுரை மற்றும் தனியார் சரவணா மருத்துவமனை மதுரை சிகிச்சை பெற்றதாக ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் எனக்கு தெரியவில்லை. எனது 161 வாக்குமூலத்திலும் நீதிமன்ற விசாரணையிலும் அ.சா.1 தனியார் சரவணா மருத்துவமனை மதுரையில் சிகிச்சை பெற்றார் என்றும் அவரது மருத்துவ குறிப்பேட்டில் சாதாரண காயம் என்று நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 தனது முதல் விசாரணையில் மதுரை சரவணா மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது தான் புகார் கொடுத்ததாக சொல்லியிருக்கிறார் என்றால் சரியல்ல, சிவகங்கை மருத்துவமனைக்கு செல்லும் போதே அ.சா.1 திருப்பாச்சேத்தி காவல் நிலைய சார்பு ஆய்வாளருக்கு தகவல் சொன்னார். மேற்படி விபரத்தை எனது 161 வாக்குமூலத்திலும் நீதிமன்ற விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 நடந்த சம்பவத்தை திருப்பாச்சேத்தி சார்பு ஆய்வளாருக்கு போன் மூலம் தகவல் கொடுத்தாரா என்றால் இல்லை. வழக்கின் முதல் தகவல் அறிக்கை 10.12.2020 இரவு 23.30 மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அரசு வழக்கு குற்ற எண்.285∵.2020 அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் 13.12.2020 காலை 9 மணிக்கு மேல் சரவணா மருத்துவமனையில் இருக்கும் போது புகார்கொடுத்ததாக சொல்லயுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அ.சா.1 இந்த

குற்றவழக்கு புகாரை கொடுக்கவில்லை என்றும் காவல்துறை அதிகாரிகள் தயார் செய்த புகார் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 10ம் வகுப்பு படித்திருக்கிறேன். சம்பவம் நடந்த நேரத்திலிருந்து எத்தனை மணி வரை அ.சா.1 உடன் இருந்தீர்கள் என்றால் சம்பவ இடத்தில் 108 ஆம்புலன்ஸ் வந்து அ.சா.1யை ஏற்றிவிடும் வரைக்கும் நான் உடன் இருந்தேன். சம்பவம்நடந்த இடம் 10.12.2020 அன்று இரவு 8.30 மணியிலிருந்து எத்தனை மணிக்கு 108 ஆம்புலன்ஸ் வந்தது என்றால் சம்பவம் நடந்த அரைமணிநேரத்திற்குள் வந்தது. T.வேலாங்குளத்திலிருந்து அரசு மருத்துவமனை சிவகங்கைக்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 23கி.மீ தூரம் இருக்கும். இடைப்பட்ட 23கி.மீயை 108 ஆம்பலன்ஸ் சென்றடைவதற்கு 2 மணிநேரம் ஆகும். எனது முதல் விசாரணை மற்றும் 161வாக்கு மூலத்திலும் எங்களுக்கும் எதிரிக்கும் இடப்பிரச்சனை இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எங்களுக்கும் எதிரிக்கும் இடப்பிரச்சனை சம்மதமாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்குதெரியாது. எங்களுக்கும் எதிரிக்கும் எந்தவித இடப்பிரச்சனையும் இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 சிகிச்சைக்கு சேர்த்த போது நான் உடன்சென்றேனா என்றால் இல்லை. இந்நீதிமன்றத்தில் அரசு தரப்பில் தாக்கல் செயய்பட்டுள்ள விபத்து பதிவேட்டில் அ.சா.1 Breathe Smell of Alcohol என்று பதிவாகியுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் மது அருந்தியதாக ஒப்புகொண்டுள்ளாா என்று தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய காவல்துறை 161 வாக்குமூலத்தில் 1ம் எதிரியின் இருசக்கர வாகனம் சம்பந்தமாக பிரச்சனை இருந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த இருசக்கர வாகனத்தின் பதிவெண் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியாது. எனக்கு எழுதபடிக்க தெரியும் ஆனால் அ.சா.ஆ.1 புகாரை நான் எழுதிகொடுக்கவில்லை என்றால் சரிதான். வரைபடத்தில் எங்கள் வீட்டில் கழிப்பறை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அது பயன்பாட்டில் இல்லை. எனது முதல் விசாரணையிலும் 161 வாக்கு மூலத்திலும், அதன் மறுவாக்குமூலத்திலும் எங்கள் வீட்டில் கழிவறை இருக்கிறது அதில் செப்டிக்டேங்க் இல்லாததால் இயற்கை உபாதை கழிப்பதற்கு அ.சா.1 வெளியே சென்றார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 சரவணா மருத்துவமனையில் 15.12.2020அன்று காயச்சான்றுபடி 11.12.2020ம் தேதி காலை 9மணிக்கு தான் சிகிச்சைக்கு சேர்ந்ததாக உள்ளது என்றால் சரிதான். சிகிச்சை

அளித்த ஆவணங்கள் மற்றும் காயத்தின் தன்மையின் அடிப்படையில் தான் காயச்சான்று அளிக்கப்படும் என்றால் எனக்கு தெரியாது. அ.சா.1 சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த போது அடையாளம் தெரியாத 5 நபர் தாக்கியதாக விபத்து பதிவேட்டில் சொல்லியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், எனது 161 வாக்குமூலத்தின் மூலம் சம்பவ இடம் இருட்டு என்றும் அதனால் எதிரிகளை அடையாளம் காணமுடியாது என்றும், வழக்கிற்காக பின்னீட்டு எதிரிகளின் பெயர்களை காவல்துறை கேட்டதன்பேரில் சேர்த்து பொய்யாக இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், அ.சா.1 எனது கொழுந்தன் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பொதுமக்கள் யாரும் சாட்சிகள் இல்லை என்றால் சரிதான், எங்கள் வீடு தான் கடைசியாக உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் தாலிகுளம் செல்லும் ரோடு என்றால் சரிதான். தாலிகுளம் செல்லும் ரோட்டை தான் பொதுமக்கள் பயன்படுத்துகிறார்கள் என்றால் சரிதான். பொதுவாக இரவு 8.30 மணி என்பது பொதுமக்கள் நடமாடும் நேரம் என்றால் நாங்கள் இருக்கம் இடம் இடுகாடு அருகே இருப்பதால் அந்த நேரத்தில் யாரும் இல்லை. அ.சா.1ன் விபத்து பதிவேட்டில் உள்ளபடி அவர் மதுபோதையில் இருசக்கர வாகனம் ஓட்டி கீழே விழுந்த சிறுகாயத்தின் அடிப்படையில் போலீசார் கேட்டதின்பேரில் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**உதவி அமர்வு நீதிபதி**
**மானாமதுரை**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No.12/2022 |
| Police Station | Thiruppachethi P.S |
| Deposition of Witness for | LW.5/PW.5 |
| Name | தவசெல்வம் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**A1, A3 present. A2,4 produced .**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 11.01.2024 at 11.20a.m

**முதல் விசாரணை:**

நான் தாலிகுளத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். அ.சா.1 குமார் மற்றும் அ.சா.2, 3 தெரியும். எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடப்பிரச்சனை இருந்து வந்தது. 10.12.2020 அன்று இரவு 8 மணியளவில் நான் எனது மாமனார் வேலு வீட்டில் இருந்தேன். அப்போது என்னுடன் என் மாமியார், மாமனார், மனைவி பாண்டீஸ்வரி, சரண்யா, எனது மச்சுனன் முனீஸ்வரன், குமார் ஆகியோர் இருந்தோம். அப்போது குமார் வீட்டிற்கு வெளியே தாலிகுளம் ரோட்டில் இயற்கை உபாதை கழிப்பதற்காக இரவு 8.30 மணியளவில் சென்றார். அப்போது குமாரின் அலறல் சத்தம் கேட்டது. அப்போது என் மாமியார், மாமனார், மனைவி பாண்டீஸ்வரி, சரண்யா, எனது மச்சுனன் முனீஸ்வரன் ஆகியோர் போய் பார்த்தோம். அப்போது எதிரிகள் 5 பேரும்அருவாள், கத்தி போன்ற ஆயதங்களுடன் இருந்தார்கள். இன்றுடன் இடப்பிரச்சனை முடிய வேண்டும் என்று சொல்லி கருப்பசாமி அருவாளை வைத்து குமாரின் தலையில் வெட்டும் போது தட்டிவிட்ட போது அந்த வெட்டு குமாரின் இடது தோள்பட்டையில் பட்டு காயமானார். பூச்சி இருளப்பன் அருவாள் வைத்து குமாரின் இடது தலையில் வெட்டினார். மாசாணம் கத்தியை கொண்டு குமாரின் இடது தோள்பட்டையில் குத்திவிட்டார். வினோத்கண்ணன் என்பவர் அருவாளை வைத்து குமாரின் வலதுதோள்பட்டையில் வெட்டினார். எதிரிகள் இத்துடன் இடப்பிரச்சனை முடிந்தது என்று சொல்லிவிட்டு

தாலிகுளம் ரோடு வழியாக ஓடிவிட்டார்கள். நாங்கள் 108க்கு போன் செய்து அதில் காயம்பட்ட குமாரை அழைத்து சென்று சிவகங்கை அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**உதவி அமர்வு நீதிபதி**
**மானாமதுரை**